## கடற்கரை கவியரங்கு– 658

**நாள்: 01-02-2026**

# உலகியல் தெளிவோம்!

காலம்  நமக்குச் சொல்லும் கதைகள்,
கனவைப் போலே மனதில் நின்றால்;
மனமும் தெளிந்து, மாற்றம் ஏற்கும்!
தினமும் பலவாய் தோன்றிடும் நிலைகள்!

தெளிவை நமக்கு திடமுடன் நல்கும்!
அளித்தது இயற்கையோ! அவரவர் வழியில்
அணைத்து மகிழும் இறையெனும் நிலையோ!
பிணைந்து வாழும் பேரின்ப நிலையால்,

பெருமைகள் தேடும் பிதற்றல் இன்றியே,
அருமை யுணர்ந்து அடுத்து நகர்ந்திட,
உரிமை கொண்டே ஒவ்வொரு நாளும்
உவந்து மகிழ்ந்து நாள்கள் தொடர்ந்திட,

தவமென்று வாழ்வின் தத்துவம் அறிந்து,
தகைவுடன் உயிர்களை அணைத்தே மகிழ,
பகையின்றி வாழ்வின் பக்கங்கள் நிறையும்!
பகலாய் இரவாய் தொடர்நிலை வாழ்வில்,

பக்குவம் எய்தி பொறாமை அகன்று,
சிக்கலில்லாத செவ்விய நிலையாய்,
சிதையா மனத்துடன் சிந்தை வளர்ந்து,
உதவும் பிறவுயிர் அணைத்திடத் தோன்றும்!

உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும்,
உன்னதம் என்றே எண்ணத் தோன்றும்!
மன்னும் நிலையோ இல்லை என அறிந்து,
மண்ணில் பிறந்த காரணம் தேடுவோம்!

- **கவிஞர் கவிவளவன்.**

28-07-2025